
தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



**கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக**

கொலோசெயர் 3:16

**இதழின் உள்ளே...**


- ★ ஆசிரியருரை
- ★ உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
- ★ பெண்களுக்கான பகுதி
- ★ சிறுவர்களுக்கான பகுதி
- ★ வேத அறிவுப் போட்டி
- ★ நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
- ★ நாளும் நடப்பும்


ஆசிரியர்
B.அர்ஜுனன்

மரம் 7 | 2007 ஜூன் | கனி 7


## The Grace of God


*-Harold F.Mohan*

தேவனுடைய கிருபை

அவர் எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கிறார்
ஒவ்வொரு புதிய நாளையும் சந்திக்க.
அவர் என்னை இருளினூடே வழிநடத்துகிறார்
வெளிச்சமாயிருந்து வழியைக் காட்ட.
அவர் என்னை தேற்றித் தாங்குகிறார்
என்னுடைய துயர நேரங்களில்.
அவர் எனக்கு ஆத்தும உணர்வை அருளுகிறார்
உண்மையான சந்தோஷத்தைக் காண.
அவர் எனக்கு மன்னிப்பருளுகிறார்
நான் வழிதவறிச் செல்லுகையில்.
அவர் என் துன்பங்களிலும்
என் பயங்கள் விறுவிறுப்பைக் குறைக்கையிலும் உதவிசெய்கிறார்.
அவர் ஒருபோதும் என்னைக் கைவிடுகிறதில்லை
நம்பிக்கையிழந்த நொடிபொழுதில்,
ஒரு உதவிக்கரத்தை நான் நாடும்போதெல்லாம்,
நான் எப்போதும் அவரைக் கண்டு கொள்கிறேன் அங்கே.








**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**

**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**

உங்கள் WIN TV -யில்
ஒவ்வொரு வாரமும் திங்கள்,
செவ்வாய் மற்றும் வியாழன், வெள்ளி
காலை 6.15 முதல் 6.30 மணி வரை
பாருங்கள். மேலும்

உங்கள் வானொலியில்
இலங்கை ஆசிய சேவை SW
49 மீட்டரில், ஒவ்வொரு புதன்
மாலை 5.45 முதல் 6.00 மணி
வரை கேளுங்கள்.

செய்தியாளர்
B.அர்ஜுனன்





THE WORD OF CHRIST
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Mobile: 9443558041


"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15
"The Churches Of Christ salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் – 7    ஜூன் – 2007    கனி – 7


ஆசிரியருரை

## காலை, மாலை, மதியம்

### Evening,and Morning, and Noon



காலை மாலை மதியம் இவ்வேளைகளை கர்த்தர் உண்டாக்கினார். இந்த மூன்று வேளைகளிலும் கர்த்தருக்கு துதி ஸ்தோத்திரம் செலுத்தி ஜெபம்பண்ணின நம்முற்பிதாக்களைக் குறித்து இவ்வேளையில் தியானிக்கவுள்ளோம்.

நாம் மூன்றுவேளை எதற்காக சாப்பிடுகிறோம்? நம்முடைய சரீரம் சோர்ந்துபோகாதிருக்கவும், சரீரத்தில் நல்ல திடகாத்திரமாக இருந்து உழைக்கவும் தினமும் மூன்றுவேளையும் சாப்பிடுகிறோம். அதைப்போல நம்முடைய ஆத்துமாவில் நாம் சோர்ந்துபோகாதிருக்க தினமும் மூன்றுவேளை ஜெபிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம் அப்பொழுது நம்முடைய ஆத்துமாக கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூரும். தாவீது தமது சங்கீதத்தில் சொல்லியிருக்கிறார் “அந்திசந்தி மத்தியான வேளைகளிலும் நான் தியானம்பண்ணி முறையிடுவேன்; அவர் என் சத்தத்தைக்கேட்பார்” (சங்.55:17). நாமும் மூன்றுவேளையும் ஜெபிக்கக்கற்றுக் கொள்ளும்போது தாவீதைப்போல கர்த்தருக்குள் திடனாய் இருந்துகொண்டு தேவனை துதித்துப்பாடவும், மகிழ்ச்சியாயிருக்கவும் முடியும். தாவீது எழுதின சங்கீதத்தை வைத்து இன்றுவரை நாம் தேவனை துதித்துப்பாடுகிறோம் அது நம்முடைய ஆத்துமாவிற்கு சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டுவருகிறது.

தாவீதின் வெற்றிக்கும் அவனுடைய ராஜ்யபாரம் நிலைத்திருந்ததற்கும் பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று, அவனுடைய மூன்றுவேளை ஜெபம். மூன்றுவேளையும் தேவனுடைய சமுகத்திற்கு போவது என்பது சாதாரண விஷயம் அல்ல. நாம் அதற்கான வேளைகளை ஒதுக்குவது மிகக்கஷ்டமான ஒன்றுதான். அவ்வாறு ஜெபிக்க நினைக்கும்போதுதான் நம்மை பார்க்க யாராவது வந்திருப்பார்கள் அல்லது வீட்டில் ஏதாவது ஒரு பிரச்சனை எழும்பும், அதனால் ஜெபிக்க முடியாமற்போய்விடும். இதெல்லாம் நாம் தேவனிடத்தில் நெருங்கி சேராதிருக்க ஏற்படும் தடைகள். இவைகளைக் கடந்து தேவனிடம் நாம் மன்றாடவேண்டும். வாழ்க்கையில் நாம் பலவகையில் போராடவேண்டியவர்களாகயிருக்கிறோம். போராடாமல் வெற்றியைக் காணமுடியாது. “நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்... மேலும்

எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினால் மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு எழுதுகிறார் (எபே.6:11,18). தாவீதுக்கு எவ்வளவோ துன்பங்கள் இருந்தது. ஆடுமேய்ப்பனாக இருந்தகாலத்தில் விலங்குகளிடமிருந்து மந்தையைக்காத்தான். கோலியாத்தினிடமிருந்து இஸ்ரவேலை காத்தான். சவுலோ இவனை கொலைசெய்துபோடும்படி பின்தொடர்ந்தான் தாவீதோ கர்த்தர் மேல்வைத்த நம்பிக்கையில் காக்கப்பட்டான். இச்செய்தியை வாசிக்கும் அன்பான தேவ ஜனமே நீ உன் தேவனை நோக்கி தாவீதைப்போல தினமும் மூன்றுவேளையும் ஜெபிக்கக் கற்றுக்கொள் உன் கன்களுக்கு நித்திரையை வரவொட்டாமல் தினமும் மூன்றுவேளை ஜெபி. அப்பொழுது தாவீதுக்கு அருளிச்செய்த காரியங்களை கர்த்தர் உங்களுக்கும் அருளிச்செய்வார். நமதாண்டவரும் தம்முடைய சீஷர்களைப்பார்த்து சொல்லும்போது; "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்"(மத்.26:41). நன்கு ஜெபிக்கவேண்டும் என்ற விருப்பம் இருக்கிறது ஆனால் மாம்சமோ அதற்கு இடமளிப்பதில்லை இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகின்றன. ஆகையினாலே நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு எழுதும்போது "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" என்று எழுதுகிறார் (1தெச.5:17). இடைவிடாமல் என்று சொல்லும்போது தொடந்து ஜெபிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு நிலத்தை வாங்கி அதில் பயிர் செய்துள்ளீர்கள். அதை தினமும் சென்று பார்த்தால்தான் அது எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை நீங்கள் அறிந்துகொள்ளமுடியும். அதைப்போல நீங்கள் நன்மைகளை தேவனிடத்தில் இருந்து பெறவேண்டுமானால் உங்களுக்கும் தேவனுக்கும் தொடர்பு இருந்துகொண்டேயிருக்கவேண்டும். வருடத்திற்கு ஒரு முறை ஜெபிக்கும்படியாக தேவாலயத்திற்கு செல்வதோ அல்லது மாதம் ஒரு முறை சபைக்கு செல்வதோ உங்களுக்கு ஆசீர்வாதத்தை கொண்டுவராது. நீங்கள் முதலாவது இடைவிடாமல் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும்.

பழையஏற்பாட்டு புத்தகத்திலே தானியேலை பற்றி படிக்கிறோம்: "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம்மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்" என்று தானி.6:10 –ல் காண்கிறோம். இவன் ஒரு ராஜ்யபாரத்தின் கீழாக இருந்தபோதிலும் அந்தக்கட்டளைகளுக்கு பயப்படாமல், தான் இராஜாதி இராஜாவாக யாரைக் கொண்டிருந்தானோ அந்த தேவனுக்கு பயந்து தன் வேண்டுதலை மூன்றுவேளையும் தெரியப்படுத்தினான். அன்பு பயத்தை புறம்பே தள்ளும் என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார். இந்த அன்பு தானியேலுக்கு அதிகமாய் இருந்தது. தானியேலைக் குற்றப்படுத்தும்படியாக பிரதானிகளும் தேசாதிபதிகளும் கூட்டங்கூடி ராஜாவினிடத்தில் போய்; எந்த மனுஷனாகிலும் முப்பது நாள்வரையில் ராஜாவாகிய உம்மைத்தவிர எந்த தேவனையானாலும் மனுஷனையானாலும் நோக்கி யாதொரு காரியத்தைக்குறித்து விண்ணப்பம் பண்ணினால், அவன் சிங்கங்களின் கெபியிலே போடப்படவேண்டும் என்று நீர் கட்டளைப்பத்திரத்தில் கையெழுத்து வைத்தீர்

அல்லவா என்றார்கள். அதற்கு ராஜா: அந்தக் காரியம் மேதியருக்கும் பெர்சியருக்கும் இருக்கிற மாறாத பிரமாணத்தின்படி உறுதியாக்கப்பட்டதே என்றான். ஆனால், சிறைபிடிக்கப்பட்ட யூதேயா தேசத்தின் புத்திரரில் தானியேல் என்பவன் உம்மையும் நீர் கையெழுத்து வைத்துக்கொடுத்த கட்டளையையும் மதியாமல், தினம் மூன்று வேளையும் தான் பண்ணும் விண்ணப்பத்தைப் பண்ணுகிறான் என்றார்கள். ராஜா இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தன்னில் மிகவும் சஞ்சலப்பட்டு, தானியேலைக் காப்பாற்றும்படிக்கு அவன்பேரில் தன் மனதைவைத்து, அவனைத் தப்புவிக்கிறதற்காகச் சூரியன் அஸ்தமிக்கு மட்டும் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த மனுஷர் ராஜாவினிடத்தில் கூட்டமாய் வந்து: ராஜா கட்டளையிட்ட எந்தத் தாக்கீதும் கட்டளையும் மாற்றப்படக்கூடாதென்பது மேதியருக்கும் பெர்சியருக்கும் பிரமாணமாயிருக்கிறதென்று அறிவீராக என்றார்கள். அப்பொழுது ராஜா கட்டளையிட அவர்கள் தானியேலைக் கொண்டுவந்து, அவனைச் சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். ராஜா தானியேலை நோக்கி: நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னைத் தப்புவிப்பார் என்றான். அந்தப்படியாக தான் தினமும் மூன்றுவேளையும் ஜெபித்துக்கொண்டுவந்த தானியேலை சிங்கங்களின் வாய்க்கு தப்புவித்தார். அன்பானவர்களே கடுமையான சட்டத்தின் மத்தியில் இருந்த தானியேல் பயப்படவில்லை தான் பண்ணும் ஜெபத்தை தொடர்ந்து செய்தான். அதனால் அவன் தேவனால் காக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டான். இன்று மனிதர்களுக்காக அல்ல, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஆசீர்வதிக்கப்பட நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு நீடித்திருக்க மூன்றுவேளையும் ஜெபிக்க மறவாதிருங்கள்.

முதல் நூற்றாண்டு காலத்தில் அப்போஸ்தலர்கள் சீஷர்கள் கூட்டத்தை வரவழைத்து : நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம் "நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்" என்றார்கள் (அப்.6:4). அன்பானவர்களே, ஜெபம் மிகவும் முக்கியமான ஒன்று. ஆகையால் இதை ஒரு ஊழியமாக வைத்து செயல்பட்டு உள்ளனர். ஜெபம் இல்லாத வீடு கூரை இல்லாத வீட்டிற்கு சமம். ஜெபத்தினாலே தான் நாம் பெரிய காரியங்களை சாதிக்கமுடியும். இதிலே முதல் நூற்றாண்டு சபையார் மிகவும் உறுதியுடனிருந்திருக்கிறார்கள். "அவர்கள் அப்போஸ்லருடைய் உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்" (அப்.2:42). இந்த உறுதி இன்றைய கிறிஸ்தவர்களுக்கு இருக்குமானால் அவர்கள் ஆவிக்குரிய கனிகளைக் கொடுத்து வளர்ச்சியடைவார்கள். முதல் நூற்றாண்டு சபைகள் இந்தவிதமாக வளர்ச்சிகண்டது. அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து. வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி சந்தோஷமாயிருந்தார்கள். இதே ஐக்கியத்தை உருவாக்க சபையார் ஜெபத்திற்கு முதலிடம் கொடுக்கவேண்டும். பவுலுங்கூட "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கள்" என்று எழுதுகிறார் (ரோம.12:12). ஜெபத்தினால் கூடாதது ஒன்றுமில்லை.


ஜெபத்தினால் மூன்று காரியங்கள் கேட்கப்படுகிறது. ஒன்று "கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா.16:24). உங்கள் சந்தோஷம் நிறைவடைய தேவனை நோக்கி இயேசுவின் நாமத்தில் வேண்டிக்கொள்ளுங்கள். கேட்டால் தானே பெற்றுக்கொள்ளமுடியும். நீங்கள் இதுவரைக்கும் ஒன்றும் கேட்கவில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். முதலாவது கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான். எங்கே நான் கேட்டு, கேட்டு, அழுத்துப்போய்விட்டேன் என்று சோர்ந்துபோகாதிருங்கள். பெற்றுக்கொள்ளும் வரை கேளுங்கள். அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான் என்று நமதாண்டவர் சொல்லியிருக்கிறார். **இரண்டாவது** "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" (யாக்.5:15). விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கிறது, அந்தப்படியாக இயேசுவினிடத்தில் அநேகர் வந்து சுகம்பெற்றனர். அவர்களைப் பார்த்து உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். ஆம், எனக்கு அன்பானவர்களே, விசுவாசமுள்ள ஜெபம் வியாதியுள்ளவர்களை குணமாக்குகிறது. ஆகையால் நாம் அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிக்கவேண்டும். எசேக்கியா இராஜா வியாதிப்பட்டு இருந்தான் அவன் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது அவனுடைய ஜீவியத்திலே பதினைந்து வருடங்களை கூட்டி வழங்கினார் அவன் சுகமானான். அவனுடைய ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் உங்களுடைய ஜெபத்தையும் கேட்பார் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் கேளுங்கள். **மூன்றாவது** "பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்" என்று அப்.12:5–ல் வாசிக்கிறோம். இவர்களுடைய ஜெபம் பேதுருவை சிறைச்சாலையிலிருந்து விடுதலைசெய்தது. கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி அவனை விடுதலைசெய்தார். கர்த்தர் கட்டுண்டவர்களை விடுவிக்கிறார் என்ற திருவார்த்தையின்படியாக விடுதலைசெய்தார்.

அன்பானவர்களே, மூன்று முறை ஜெபிப்பதால் அநேக நன்மைகள் நமக்கு உண்டாகிறது. தாவீது, தானியேல் போன்றோர் மூன்றுமுறை ஜெபித்து முன்னேறினர். கர்த்தர் அவர்களை காத்து வழிநடத்தினார் தேவன் அவர்களோடு இருந்தார். இன்று நம்மோடு இருக்க இவ்விதமாக நாமும் ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மூன்றுவேளை மாத்திரமல்ல அதற்கு மேலும் நாம் ஜெபிக்க மறந்துவிடாதிருப்போம். நம்முடைய தேவைகளுக்காக, வியாதியுள்ள தேவமனிதர்களுக்காக, பலவிதமான உபத்திரவத்தினால் கட்டுண்டவர்களுக்காக நாம் அநுதினமும் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். "முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது" பிர.4:12 வசனத்தின் படி இணைந்து ஜெபிக்கவேண்டும், ஆதி அப்போஸ்தலர்களைப்போல ஒருமனப்பட்டவர்களாக ஜெபத்திலே தரித்திருக்கவேண்டும். "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:10,11). அந்த நாமத்திற்கு கீழ்ப்படிந்து, அந்த நாமத்தினாலே தேவனை நோக்கி ஜெபித்து மேற்கண்ட ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுங்கள். மூன்றுவேளையும் முப்புரிநூலைப்போல உறுதியாய் இருந்து ஜெபிக்க மறவாதிருங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# கிறிஸ்தவம் ஏன் மிகவும் வித்தியாசமுள்ளதாயிருக்கிறது

## Why Christianity Is So Different

*-J.C.Choate*



**கி**றிஸ்தவம் உலகம் முழுவதிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டவர்கள் லட்சம் லட்சங்களான எண்ணிக்கையில் உள்ளனர். இதன் அங்கத்தினர்களாக இதனுடைய செய்தியை எடுத்துச் சென்று, இதனுடைய அங்கத்தினர்கள் தொடர்ந்து வளர்ந்து வருகின்றனர்.

கிறிஸ்தவம் கிறிஸ்துவில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலானது – மற்ற மனுஷரில் அல்ல, மற்ற பரிசுத்த மனுஷரில் அல்ல அல்லது மற்ற தீர்க்கதரிசியிலும்கூட அல்ல, ஆனால் உலகத்தின் பாவங்களுக்காக மரித்தவரும் என்றென்றும் வாழும்படி கல்லறையினின்று உயிர்த்தெழுந்தவருமாயிருக்கிற தேவனுடைய குமாரனாயிருக்கிறவரில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையிலானது. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பேதுருவும் அப்போஸ்தலர்களும் அறிக்கையிட்டார்கள் (மத்.16:16–18). தேவனும்கூட கிறிஸ்து தம்முடைய குமாரனென்று வானத்திலிருந்து வெளிப்படையாகத் தெரிவித்தார் (மத்.17:5).

இன்று உலகத்தில் ஒரு உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கிற ஒரே சமயம் கிறிஸ்தவமே. மற்ற சமயங்களின் தலைவர்களெல்லாம் மரித்தவர்களாகவும், மீண்டும் உயிரோடே எழாதவர்களாயுமிருக்கிறார்கள். கிறிஸ்து தாம் மரித்தோரிலிருந்து திரும்பவும் வருவேன் என்று சொன்னார். அந்தபடியே உயிர்த்தெழுந்தார் (யோவா.11:25; மத்.28:1–6) அவர் தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றாதவராயிருந்திருந்தால்; அவர் பொய்யராகவும், வஞ்சகராகவும் இருந்திருப்பார். அவர் உயிர்த்தெழாதிருந்தால், கிறிஸ்தவம் ஒருபோதும் வளர்ந்திருக்காது. ஆனால் கிறிஸ்தவம் உயிர்வாழ்கிறது. சபை உயிர்வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உயிர்வாழ்கிறது, கிறிஸ்து ஜீவிக்கின்றபடியால் எல்லாமே உயிர் வாழ்கின்றது.

கிறிஸ்தவம் ஒரு பிரபல்யமான சமயம். வேறு எந்த ஒரு சமயம் அல்லது நம்பிக்கையைக் காட்டிலும் கிறிஸ்தவமானது நன்மையானவற்றிக்காக உலகத்தை மாற்ற பலவற்றைச் செய்திருக்கிறது. உலகின் சர்வதேச பஞ்சாங்கம் தங்களுடைய காலங்களை கிறிஸ்துவின் ஜீவியம் மற்றும் மரணத்தின் அடிப்படையிலே நிர்ணயம் செய்துள்ளது. தேசங்களின் சட்டங்கள் பெருமளவு கிறிஸ்துவின் நீதி போதனைகளினாலே வசீகரசக்தி பெற்றுள்ளது. கிறிஸ்து வாரத்தின் முதல்நாளில் கல்லறையிலிருந்து உயிரோடே வெளிப்பட்டார் என்ற உண்மையின் அடிப்படையிலும், மேலும் கர்த்தர் தம்முடைய சீஷர்கள் தம்மை நினைவுகூரும்படி, தேவனை ஆராதிக்கும்படி வாரத்தின் முதல் நாளில் கூடிவர தம்முடைய ஜனங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறார் என்பதின் அடிப்படையிலும் (மத்.28:1–6; அப்.20:7) அதிகமான நாடுகள் ஞாயிற்றுக் கிழமையை விடுமுறை நாளாக அங்கீகரிக்கிறது. இது நிச்சயமாகவே கிறிஸ்தவத்திலிருந்து வந்தது.

கிறிஸ்தவம் மனிதனுக்கென்று அறியப்பட்டுள்ள மிக மேன்மையான நீதி கொள்கைகளை ஆதரிக்கிறது. இது நேர்மை, ஒருவனுடைய கடனைத் திரும்பச் செலுத்துதல், வேலைக்குக் கூலி கொடுத்தல், ஒருவரை ஒருவர் கனம்பண்ணுதல் போன்றவற்றை போதிக்கிறது. இது நல்லொழுக்கத்தையும், குடும்ப மேன்மையையும் ஆதரிக்கிறது. மேலும் ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண புந்தத்தை ஆதரிக்கிறது அத்தோடு அவர்கள் ஒருவருக்கொருவர் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. இது எல்லாருக்கும் தேவன் தலைவராயிருக்கிறார், மனைவிக்கு புருஷன் தலைவராயிருக்கிறான் என்பதை அங்கிகரிக்கிறார் ஆனால் மனுஷனும் ஸ்திரீயும் தங்களுக்கென்று பொறுப்புகளைப் பெற்றிருக்கிறார்கள் மேலும் தங்களுடைய பிள்ளைகளைப் போஷித்து தேவனுக்கேற்ற புத்திமதியில் வளர்க்கும் பொறுப்புகளையும் பெற்றிருக்கிறார்கள்.

கிறிஸ்தவம் ஒரு சமயம், தேவனுக்கும் மனிதனுக்கும் கொடுக்கப்பட்டுள்ள அன்புப் பணி என்பதே சமயத்தின் அர்த்தமாயிருக்கும். யாக்கோபு, "திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது" என்றார். இதன் பொருள் சமூக சேவை செய்வதைக் காட்டிலும் திக்கற்ற பிள்ளைகளையும் விதவைகளையும் சந்திப்பதே மேன்மையானது என்பதாகும். இதன் பொருள் தேவையிலிருக்கும் ஜனங்களை விசாரிப்பதாகும். கிறிஸ்தவர்கள் தங்களால் இயன்ற அளவிற்கு மற்றவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு கடமையுணர்ச்சியைக் கொண்டுள்ளனர். பவுல், "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்" (கலா.6:2) என்றார்.

எல்லாவற்றையும் சிருஷ்டித்தவராகிய தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாக கிறிஸ்தவத்தை எடுத்துச் சொல்லுகிறவர்கள், மனுஷரோடு வாசஞ்செய்யும்படிக்கும் உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையிலே மரிக்கவும் உலகத்திற்கு அனுப்பப்பட்டவராகிய கிறிஸ்துவே தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கின்றனர். கிறிஸ்து, "ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோவா.8:24). தேவனுடைய வார்த்தையை எழுதும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் எண்ணிலடங்கா விஷயங்களை பல நூறு ஆண்டுகளுக்கும் மேலாகவே உணர்த்தினார் என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர், ஆனபடியினால் வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது, எனவே இது தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது (2பேது.1:21; 2தீமோ.3:16,17; மத்.24:35). கிறிஸ்து தம்முடைய சபை ஸ்தாபித்தார் என்றும், அது ஒரே ஒரு சபையென்றும், இரட்சிக்கப்படுகிறவர்கள் அதில் சேர்க்கப்படுகிறார்களென்றும் நாம் விசுவாசிக்கிறோம் (மத்.16:18; எபே.4:4–6; அப்.2:47). கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மேலும் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டு அதுவே உலக முழுவதுக்கும் பிரசங்கிக்கப்பட வேண்டிய நற்செய்தியாயிருக்கிறது என்று விசுவாசிக்கிறோம். கிறிஸ்து, "பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்; (மாற்.16:15,16) என்றார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்தவர்களாக மட்டுமே மாறி,

வாரத்தின் முதல் நாளில் தேவனை ஆராதித்து, அவர்கள் அனுதினமும் கிறிஸ்துவுக்காக வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என விசுவாசிக்கிறோம் (மத்.7:21; 1பேது.4:16; யோவா.4:24; அப்.20:7; லூக்.9:23).

கிறிஸ்தவம் கிறிஸ்துவுக்குள் இருக்கிற எல்லாவிசுவாசிகளின் ஒற்றுமையை ஆதரிக்கிறது (1கொரி.1:10), மேலும் அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒன்றாயிருக்கிறார்கள். பவுல், "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா.3:26–28) என்று எழுதினார்.

ஒருவன் வெளிப்படையான் சரீரப்பிரகாரமாக தேவனுடைய குடும்பத்தில் பிறக்கமுடியாது ஆனபடியால் கிறிஸ்தவம் சரீரப்பிரகாரமான பிறப்பின் மூலம் வளருகிறதில்லை ஆனால் ஆவிக்குரிய பிறப்பின்மூலம் வளர்கிறது (யோவா.3:3–5). வேறுவார்த்தையில், கர்த்தர் தம்முடைய சீஷர்களை தம்மைப் பற்றி ஜனங்களுக்குப் போதிக்கும்படி, அவர்களிடத்தில் வேவகத்துடன் விளக்கவும், கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொள்வது அவர்களுக்கு அவசியம் என அவர்களை நம்பச்செய்யவும், அவருக்குக் கீழ்ப்படியபண்ணவும் ஜனங்களை அனுப்புகிறார். அப்போது தான் கிறிஸ்து அவர்களை இரட்சித்து அவர்களை தம்முடைய பிள்ளைகளாக உருவாக்கமுடியும். பவுல் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதின் மூலம் விசுவாசம் வருகிறது என நமக்கு நினைப்பூட்டுகிறார் (ரோ.10:17), எபிரெய எழுத்தர் விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்கிறார் (எபி.11:6). மீண்டும், எபிரெய எழுத்தர் கிறிஸ்துவைக் குறித்தும் அவருடையவர்களாக இருப்பவர்களைக்குறித்தும், "அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி" (எபி.5:8,9) என்றார். அதன் பொருள் சிறு பிள்ளைகள் அல்லது குழந்தைகள் கிறிஸ்தவர்களாக அல்லது சபை அங்கத்தினர்களாக மாறமுடியாது. அவர்கள் தீமையிலிருந்து நன்மையை அறியும்படிக்கும் கிறிஸ்துவின் போதனையைக் கேட்கும்படிக்கும், அவர்கள் தாமாகவே கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக்கீழ்ப்படியவேண்டும் அல்லது வேண்டாம் எனத் தீர்மானிக்கும்படிக்கும் வளரவேண்டும்.

கிறிஸ்தவம் எல்லாரும் முடிவிலே உயிர்த்தெழுவார்களென்றும், அங்கே எல்லாருக்கும் ஒரு நியாயத்தீர்ப்பு உண்டென்றும், எல்லாரும் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்களென்றும் போதிக்கிறது. கிறிஸ்து, "இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவா.5:28,29) என்றார். நாமும் இதை வாசிக்கிறோம்: "ஏனென்றால், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" (எபி.9:27). பவுல் "ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக

வெளிப்படவேண்டும்" (2கொரி.5:10) என்று வெளிப்படையாகக் கூறுகிறார். நியாயத்தீர்ப்பு நடைபெற்ற பின்பு, துன்மார்க்கர் நித்திய ஆக்கினைக்குள்ளாக அனுப்பப்படுவார்கள் ஆனால் நீதிமான்களோ நித்திய ஜீவனைப் பெறுவார்கள் (மத்.25:46).

கிறிஸ்தவம் எதிர்க்கிற காரியங்களும் உண்டு. இது சாத்தானையும், உலகத்தையும் அதின் மாம்சக்கிரியைகளையும் எதிர்க்கிறது (1யோவா.2:15–17: கலா.5:19–21). மிகவும் குறிப்பாக, இது போர், லஞ்சம், புகைப்பிடித்தல், சூதாட்டம், மதுஅருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், கருக்கலைப்பு, சுயபுணர்ச்சி, இது போன்ற பலவற்றிற்கும் எதிர்த்து நிற்கிறது. இது ஜாதிமுறைமையையும், விக்கிரகாராதனையையும், எல்லா தவறான சமயங்களையும், மனுஷருக்கு முன்பாக தங்களை கடவுள்கள் என்று காண்பிக்கிறவர்களையும் புறக்கணிக்கிறது. இது மறு அவதாரத்திலும் இந்த ஜனங்கள் மாம்சம் புசிக்கிறதை தவிர்ப்பதிலும் நம்பிக்கைகொள்கிறதில்லை. பவுல் சிலர் விவாகம் பண்ணாதிருக்கவும் மாம்சம் புசியாதிருக்கவும் கட்டளையிடுகிறார்கள் "தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல" (1தீமோ.4:3–5) என்றார்.

கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாங்கள் தேவனுடைய வார்த்தையில் இடம்பெறாத எல்லா கிறிஸ்தவ அமைப்புகளையும் எதிர்க்கிறோம். வேறு வார்த்தையில், அதிகமாய் உலகத்திற்கு ஒத்த தோற்றமுடைய கிறிஸ்தவம் தவறான கிறிஸ்தவமாயிருக்கிறது. இது உண்மையாயிருப்பதினால் கிறிஸ்தவம் கெட்ட பேரை சம்பாதிக்கிறது. கிறிஸ்தவர்கள் சண்டையிடுகிறதை, கிறிஸ்தவர்கள் இதைச் செய்கின்றனர், அதைச் செய்கின்றனர், எதுவெல்லாம் தீமையானதும், தவறானதுமாக இருக்கிறதோ அதையெல்லாம் செய்கின்றனர் எனக் கேள்விப்படுகிறோம். மேலும் இது உண்மை கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துகிறதில்லை. வேதாகம கிறிஸ்தவமும், அதை வழக்கப்படுத்திக் கொள்ளுகிறவர்களும் நன்மைக்கென்றே அறிப்பட்டவர்கள், அதை அவர்கள் செய்து இவ்வாறாக தாங்கள் வாழும் உலகத்தை சிறப்பானதாக உருவாக்குகின்றனர். ஆனபடியால், தேவனுடைய வார்த்தை மனிதனால் உருவாக்கப்பட்ட கிறிஸ்தவத்திற்கும் பிரிவினை சபைகளுக்கும், அமைப்புகளுக்கும் எதிராகபோதிக்கிறது.

உலக சமயங்களை அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என உரிமைபாராட்டுகிற மனுஷ பிரிவினைகளை நாம் நம்புகிறதில்லை, ஆனால் நாங்கள் சமய சுயாதீனத்தில் விசுவாசம் கொள்கிறோம். தேவன் தாமே உலகத்தின் தவறான மார்க்கங்களை அங்கிகரிக்கிறதில்லை, ஆனால் அவர் ஒவ்வொரு மனுஷனையும் அவன் தம்மை சேவிக்க அல்லது தம்மை புறக்கணிக்க அவனுடைய தீர்மானத்திற்கு விட்டுவிடுகிறார். ஒரு மனிதனும் தன்னுடைய மார்க்கத்தை மற்றவன் மேல் திணிக்க அதிகாரம் கொண்டிருக்கவில்லை. மனிதன் தான் செய்யவிரும்புகிற வண்ணமாக தன் ஆத்துமாவில் செய்ய சுதந்திரம் பெறுகிறவரை அவன் உண்மையாக சுதந்திரமாக இல்லை (யோவா.8:32) மனிதனுக்கு தேவனை அறிமுகப்படுத்துகிறதும் அவன் தன் பாவங்களிலிருந்து எவ்வாறு விடுதலை அடைய முடியுமென்கிறதுமான தேவனுடைய வார்த்தையின் மூலம் மெய்யான சுதந்திரம் வருகிறது.

நீ எந்த மார்க்கத்தை பின்பற்றுகிறாய்? ஏன் அதைப் பின்பற்றுகிறாய்? அந்த மார்க்கத்தில் மாம்சத்தில் பிறந்தாயா? அல்லது போதனையின் விளைவாக அதை ஏற்றுக்கொண்டு இது ஒரே மெய்யான வழியைக் காட்டுகிறது என்ற விசுவாசத்திற்குள் வந்திருக்கிறாயா?

உன்னுடைய சமயம் ஞானத்தை உருவாக்குகிறதா? இது இன்றைய நவீன உலகத்தைப்போல் இருக்கிறதா அல்லது இது நீ ஜீவிக்கும்படி கடந்த காலத்திற்கே உன்னை கொண்டு செல்கிறதா? உனக்கு அறிவை உணர்த்தும் அவசியமான காரியங்களைக் கொண்டிருக்கிறதா அல்லது இது பொருத்தமில்லாத உன்னை முட்டாளாக்கக் கூடிய காரியங்களைச் செய்யும்படி வழிநடத்துகிறதா?

ஜனங்கள் ஒரு குறிப்பிட்ட நிலை இருந்தால் மட்டுமே வாசிப்பதற்கும், படிப்பதற்கும் தங்களுடைய சுய தீர்மானங்களை உருவாக்குவதற்கும் தருணங்களைக் கொண்டிருக்க வேண்டுமென்று பயப்படுவதற்கு கிறிஸ்தவத்தில் ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் பொருத்தமுள்ளது அறிவுப் பூர்வமானதென்று நாங்கள் நம்புகிறோம். இதற்கும் மேலாக, கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களையும் கிறிஸ்துவை விசுவாசிக்காதவர்களையும் பாருங்கள், எந்த சமயம் அவர்களுக்காக கிரியை நடப்பிக்கிறது என்றும் கவனியுங்கள். நீங்கள் இதை பயிற்சிக்கும்போது, அதிகமான மாற்றங்கள் மூலம் இதன் ஜனங்கள் நன்மைக்காகவும், இது இவர்களை சரீரப்பிரகாரமாகவும் ஆவிக்குரியபிரகாரமாகவும் நல்வாழ்விற்கு வழிநடத்துகிறது நிச்சயமாக கிறிஸ்தவம் என்றும் காண இயலும். இந்த ஜனங்கள் அவர்கள் வாழ்விற்கென்று அதிகமாகப் பெற்றிருப்பதாலும், வருங்காலத்திற்கென்றும் எல்லாவற்றையும் பெற்றிருப்பதாலும் மற்றவர்களைக் காட்டிலும் சந்தோஷமிக்கவர்களாக இருக்கின்றனர்.

நீ கிறிஸ்துவில் விசுவாசியாக இல்லாவிட்டால், கிறிஸ்தவத்தைக் குறித்து ஆராய்ந்து பார்க்கும்படி உன்னை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் இது குறித்து வாசி. நீ அப்படி வாசிப்பாயென்றால், நீ ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவாய் என்று நான் நம்புகிறேன். இதற்கும் மேலாக, நீ தேவனிடத்திலும் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசம் கொள்வதின் மூலமும், உன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்புவதின் மூலமும், கிறிஸ்துவை உன் வாயினாலே அவர் தேவனுடைய குமாரனென்று அறிக்கையிடுவதின் மூலமும், உன் பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வதின் மூலமும் நீ கிறிஸ்தவனாக மாறமுடியும் (எபி.11:6; யோவா.14:1–3; அப்.17:30; ரோம.10:10; அப்.2:38). நீ இதைச் செய்யும்போது, கர்த்தர் உன்னை இரட்சித்து தம்முடைய சபையில் சேர்ப்பார், இவ்வாறாக நீ ஒரு கிறிஸ்தவனாக மாறி கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாவாய் (அப்.2:47; 1பேது.4:16). இது எளிமையானதில்லையா? இது மிகவும் எளிமையானதும் குழப்பமற்றதுமாகும். தயவு செய்து இது குறித்து தடுமாறாதே.


## உங்களுக்கோர் நற்செய்தி!

வானொலியில் மேலும் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை


தாவீது – யோனத்தானின் உரையாடல் மற்றும் தேவ செய்தியை

கொழும்பு சர்வதேச வானொலி MW 873 KHZ – ல்

காலை 8.45 முதல் 9.00மணி வரை கேட்டு பயன்பெறுங்கள்

இது கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி





பெண்கள் பகுதி

# திருமணம் போராட்டத்திற்கு தகுதியானதல்ல

# Marriage is not worth the struggle

-Betty Burton Choate



ஆதியிலே, ஆதியாகமம்1 மற்றும் 2–ன்படி, தேவன் வானத்தையும், பூமியையும் மேலும் சகலவித உயிருள்ள விருட்சங்களையும், மிருகங்களையும் மட்டும் சிருஷ்டிக்கவில்லை மாறாக அவர் தம்முடைய சுயசாயலில் சிருஷ்டிக்கப்பட்டுள்ள தம்முடைய சிருஷ்டியை முடிசூட்டினார்: "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; ........ தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார் ...... இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" (ஆதி.1:26,27; 2:24).

இயேசுவின் ஊழியநாட்களில், அவர் விவாகம் மற்றும் விவாகரத்து குறித்து கேள்வி கேட்கப்பட்டு அவர் பிரதியுத்தரமாக: ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும், நீங்கள் வாசிக்கவில்லையா? இப்படி இருக்கிறபடியினால், அவர்கள் இருவராயிராமல், ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்; ஆகையால், தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என்றார்"(மத்.19:4–6).

மோசேயின் கட்டளையின் கீழ் தள்ளுதற்சீட்டைக் கொடுத்து விவாகரத்து செய்ய அனுமதிக்கப்பட்டதைக் குறித்து, இயேசு, "உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; **ஆதிமுதலாய் அப்படியிருக்க வில்லை.** ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்; தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்"(மத்.19:8,9).

புருஷன்/மனைவி உறவின் நெருக்கத்தைப்பற்றிய இன்னொரு விளக்கத்தினை, நாம் எபேசியர்5:22–33–ல் வாசிக்கிறோம், "மனைவிகளே, கத்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; ....... ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும்.

"புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து...... அதற்காக ஒப்புக்கொடுத்தார். ........ அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே; கர்த்தர் சபையைப் போஷித்து காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். ........ எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்".

இவ்வசனங்கள் விவாகம் தேவன் திட்டமிட்ட முன்னேற்பாடாயிருக்கிறது என்பதை தெளிவாக விளக்குகின்றன. தலைவனாகக் கருதப்படும் புருஷனானவன் குடும்பத்தில் அன்புகூருகிற தலைவனாயிருக்கும்போதும், மனைவி தன் புருஷனிடத்தில் அன்புகூர்ந்து பயபக்தியாயிருக்கும் போதும், எல்லாவகையிலும் தங்களை 'ஒரே' மாம்சமாக மாற்றுவதற்கு ஒப்படைக்கும் போதும், அவர்கள் ஒரு சீரிய, உயர்ந்த உறவினைக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் உலகத்தில் மிகக் குறைந்தவர்களே "பூரணமாக இருக்கின்றனர். இருவேறுபட்ட மக்களுடைய இணைப்பு– ஒவ்வொரு தோற்றத்திலிருந்து வேறுபாடு, ஏனென்றால் ஒருவர் ஆண் இன்னொருவர் பெண்–மேலும், ஏற்றுக்கொள்ளுதல், அவர்கள் ஒரு முழுமையில் இருபாதியாகயிருக்கும்படி நிச்சயிக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் முழுமையானது உண்மை, தொடர்ச்சியான அன்பு மன்னிக்க முயல்வது போன்றவற்றின் மூலம் மட்டுமே போய்ச் சேருகிறது. அவர்கள் வித்தியாசமான சூழல்களையும், வித்தியாசமான மதிப்பீடுகளையும், இலக்குகளையும், மேலும் வித்தியாசமான சமய அர்ப்பணிப்புகளையும் கூட கொண்டு வருகிறார்கள். அவர்கள் அனுபவமின்மையையும், முதிர்ச்சியடையா நிலையினையும் கூட விவாகத்திற்குள் கொண்டு வருகிறார்கள். இந்த எல்லாக் காரியங்களும் பிரச்சனைகளுக்கும், தவறான புரிந்துகொள்ளுதலுக்கும், மனவேதனைகளுக்கும் காரணமாகி, முடிவாக நிதானமான, **"திருமணம் போராட்டத்திற்கு தகுதியுடையதா?"** என்ற வினா எழுப்பவும் செய்கிறது.

இன்று பலர் விவாகத்தை 'எழுதலும் வீழ்தலும்' ஆன பலபரீட்சையைப் போல எண்ணுகின்றனர். விவாகம் "செயல்பட" வில்லையென்றால் பிறகு விவாகரத்து என்பது எளிதான தெரிந்து கொள்ளுதலாயிருக்கிறது. இவ்விதமான நினைவு **ஒப்புக்கொடுத்தலின்** அஸ்திபார மனநிலையை நீக்குகிறது. மிகச் சில மனித உறவுகள் பலவருடங்களாக ஒப்புக்கொடுத்தல் மட்டுமல்லாது விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, முடிவிலே உறவினைக் காத்துக்கொள்ளும்படியான தீர்மானம் போன்றவற்றினை தொடருகின்றன.

இதுவே விவாகத்தில் உண்மையாயிருக்கிறது. தேவன் திட்டமிட்ட விவாகம் மனித உறவுகளின் அஸ்திபாரத்தூணாக இருக்கிறது. விவாகத்தினுள் ஒரு குடும்பத்தார் பிறந்துள்ளனர், குடும்பங்கள் கட்டப்பட்டிருக்கின்றன, தேசங்கள் வளர்ந்துள்ளன நாகரிகங்கள் பெருகியுள்ளன, மேலும் தேவனோடுள்ள நித்திய வீட்டிற்கென ஆயத்தமாக்கப்பட்டுள்ளன. இது என்றென்றும் உருவாக்கப்பட்டுள்ள மிக முக்கியமான மனிதனுடைய ஸ்தாபனமாயிருக்கிறது. தேவன் இதனுடைய ஸ்தாபகர், மனுஷர்– விவாகரத்தின் மூலம், அல்லது மனநிலை பாதிக்கப்படுவதின் மூலம், உலகத்திறகு ஒத்த நிலை வெளிப்படுகையில் உணர்ச்சி வயப்பட்ட பிரிவினையின் மூலம் வீட்டை அழிக்கத்

தீர்மானத்தை உருவாக்குகிறான்– இவைகள் மனுஷருக்காக ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய உண்மையான சித்தத்திற்கு விரோதமாக இருக்கின்றன.

நீங்கள், திருமணம் போராட்டத்திற்கு தகுதியானது எனத் தீர்மானித்திருப்பீர்களென்றால் திரும்பிச்சென்று உங்களுடைய தீர்மானத்தினை மறுஆய்வு செய்யுங்கள்.நீங்கள், உங்களுக்காகவும் உங்களுடைய துணைக்காகவும், விவாகரத்து மற்றும் விவாகமான நிலை–அல்லது யாரோ ஒருவரோடே வருங்கால முறையற்ற விவாகம் போன்றவற்றை தெரிந்து கொள்ளுகின்றீர்கள். இது தேவனால் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது, மேலும் நீங்கள் இப்பேர்பட்ட கீழ்ப்படியாத நிலையில் இரட்சிக்கப்பட முடியாது. விவாகம் கிரியை நடப்பிக்கும் மேலும் இது எவ்வித முயற்சிகள் எடுத்தாலும் மகிமையான சந்தோஷத்தைக் கொண்டுவரும்.

*வாசகர் கவனத்திற்கு,*

*இவ்விதழை பெற்றுக்கொள்ள உங்கள் தெளிவான முகவரியை ஆங்கிலத்தில் எழுதி அனுப்புங்கள். முகவரி மாற்றமுள்ளவர்கள் உங்கள் பதிவு எண்ணை குறிப்பிட்டு தெரியப்படுத்தவும்.*

*ஆசிரியர்.*

## வேத அறிவுப்போட்டி எண் 81-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| N. கமலவேனி | -சென்னை |
| K. சதீஸ்குமார் | -பத்திரிகுப்பம் |
| J. நிர்மலாஜான் | -மதுரை |
| G. பூங்கோதை | -வெள்ளை பாளை |
| Mrs. மரகததிரவியம் | -கோம்பை |
| K. கோமதி | -க.பாளையம் |
| G.P. ஏசையன்ராஜ் | -கோபி |
| D. யேசுதாஸ் | -சித்தூர் (A.P) |
| P. அலிஸ்மேரி | -வத்தலக்குண்டு |
| J. ஐசக் | -வ.பேட்டை |
| A. ஆனந்த் | -நாகமலை |
| K. மோகன் | -கொ.பாளையம் |
| IRA. எதிராஜன் | -சங்கரி |

## வேத அறிவுப்போட்டி எண் 81-ன் விடைகள்

1.நம்பிக்கையல்ல -ரோ.8:24
2. மோசேயின் -1கொ.9:9
3. நாவு -யாக்.3:8
4. இயேசுவுக்கு -1பே.3:22
5. அவர் நடந்தபடியே -1யோ.2:6
6. கடாட்சிப்பேன் -மல்.3:17
7.விடுதலை பண்ணுவேன் -சக.9:11
8. நன்மையைத் தேடுங்கள் ஆமோ.5:14
9. எரேமியா -புல.3:57
10. மேல்மச்சு, வீடு -பிர.10:18

**சென்றமாத இதழில் வெற்றிபெற்றவர்களில் விடுபட்டவர்கள்**

1. G.P. ஏசையன்ராஜ் -கோபி 2. D. யேசுதாஸ்-சித்தூர் (A.P) 3. P.S. லலிதா பிரேமகுமாரி-மதுரை 4. G. பூங்கோதை -வெள்ளைபாளை 5. Sis. இம்மானுவேல்-கடலூர்

பாடம் - 17

# பிரசங்கியாரின் தோற்றம்

## The Preacher`s Appearance

J.C.Choate

*-Translated by G.Daniyal, Chennai*

தோற்றத்தைக்குறித்த ஒன்றை வேதாகம பாடமாக அல்லது நம்முடைய காலத்தில் தகுதியுள்ளதாக நீங்கள் எண்ணாமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் பிரசங்கியாரைக் குறித்து அவர் யார்? எதற்கு பிரதிநிதி, அவருடைய செல்வாக்கு என்ன? என்பதை எல்லாம் நினைக்கும்போது அவரைக் குறித்த ஒவ்வொன்றுமே முக்கியமானது என்று உணர முடியும்.

வாலிபர்களையோ அல்லது வயதானவர்களையோ இந்த விஷயத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பிரசங்கியார்களாக இருக்கிறவர்கள் அழகாகவும் நன்கு உடுத்தியவர்களாகவும், வசதியான குடும்ப பின்னணியில் இருக்கிறவர்களாகவும் இருக்கவேண்டு மென்பதில்லை. நம்முடைய கர்த்தரைக் குறித்து சொல்லும்போது அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமுமில்லை அவரைப் பார்க்கும்போது நாம் விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்ததென்று சொல்லப் பட்டிருக்கிறது. அப்போஸ்தலரில் அநேகர் படிப்பறிவில்லாத ஏழ்மையான, கடினமான பின்னணியிலிருந்தே வந்தவர்களாயிருக்கிறார்கள். பவுல் கூட ஒரு பெரிய பேச்சாளராகக் கருதபடவில்லை. மேலும் கலாத்தியார் 4:15; 2கொரிந்தியர் 12:17–ன்படி அவர் பார்வை மங்கியவராக இருந்திருக்க கூடும். நான் தனிப்பட்ட முறையிலே ஊனமுற்ற மேலும் விரும்பத்தக்க தோற்றமில்லாத பிரசங்கியார்களைப் பார்த்திருக்கிறேன். அநேக பிரசங்கியார்கள் நிச்சயமாகவே செல்வந்தர்களல்ல அல்லது பணக்காரர்களல்ல அல்லது பரம ஏழைகளுமல்ல. ஆகவே பிரசங்கியாரைப் பொறுத்தவரையில் அவருடைய சரீர அழகை குறித்துக் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் தன்னை இந்த சமூதாயம் எப்படிப் பார்க்க வேண்டுமென்று தயாராகிறார். அவரது பொதுவான மனப்பான்மை அவருடைய ஒட்டுமொத்த தோற்றம் மற்றவர்கள் அவரை எப்படி பார்க்கிறார்கள் என்பதே முக்கியமானது.

தேவனுடைய வார்த்தையை அறிவிக்கிற வகையிலே அவர் தேவனுடைய தூதுவராக இருக்கிறார். முதலாவதாக அவர் ஆவிக்குரியவராக தோற்றமளிக்காமல் ஆவிக்குரியவராகவே இருக்க வேண்டும். அவர் தன்னுடைய சகலவிதமான அருவருப்புகளையும். அசுசிகளையும் உடைய பழைய மனுஷனைக் களைந்து போட்டு விட்டு நீதியான கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவராக இருக்க வேண்டும் (2கொரிந்தியர்5:17–21). அவர் பெருமையுள்ளவராகவோ, மேன்மையுள்ளவராகவோ, தற்பெருமையினால் நிறைந்தவராகவோ. இல்லாமல் சாந்தமாயும், அன்பாயும், மென்மையாகவும் இருக்க வேண்டும். (1பேதுரு – 5:5; 2கொரிந்தியர் 10:15, 18;மத்தேயு 5:5; தீத்து 3:2; 1 யோவான் 4:21). பிரசங்கியாரைக் குறித்து பவுல் சொல்லுகிற வார்த்தைகள் மிக பொருத்தமாக இருக்கிறது: "ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும்,

தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;... வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும் அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்"(கொலேசெயர் 3:12.17). ஆகவே ஒரு பிரசங்கியார் கிறிஸ்துவைப் போலவும் எப்போதும் நன்மையும், நீதியுமானவைகளில் தேவனை வெளிப்படுத்துகிற மாதிரியாகவும் இருக்க வேண்டும். சகோதரர்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அதுபோலவே உலகமும் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அவர் நேர்மையாயும், உண்மையாயும் இல்லாவிட்டால் அது எளிதில் தெரிந்துவிடும். அவர் மாய்மாலக்காரனாக இருந்தால் அதுவும் வெளிப்பட்டுவிடும். ஒருவர் பிரசங்கியாராக இருக்க வேண்டும் என்று மனதார விரும்பி தன்னைச் சுற்றியுள்ளவர்கள் மத்தியிலே செல்வாக்கு மிக்கவராயிருக்க வேண்டுமென்றால் அவர் பிரசங்கிப்பதை நடைமுறையில் காண்பிக்க வேண்டும்.

ஒரு மனிதன் தான் ஆவிக்குரிய வகையில் மிகச் சிறந்து காணப்பட்டு, சரீரப் பிரகாரமாகவும் மிகச்சிறப்பாக தோற்றமளிக்க வேண்டும். உண்மைதான் இன்றைக்கு அநேக மக்கள் உங்களுடைய புறம்பான தோற்றத்தைக் கண்டு தீர்ப்பளிப்பது முக்கியமல்ல, இருதயத்தில் என்ன இருக்கிறதோ அதுவே முக்கியமென்று சொல்வார்கள். மனிதர்கள் அடிக்கடி ஒரு மனிதனுடைய தோற்றம், செயல்களைப் பொறுத்த மட்டில் வெளித் தோற்றத்தையே பார்ப்பார்கள். அதேசமயம் கர்த்தர் நோக்கங்களையும் மனப்பான்மையை பொறுத்தவரையில் இருதயத்தையே பார்க்கிறார் என்பதும் அதே போல் உண்மையானது (1 சாமுவேல் 16:7). இருப்பினும் ஒருவருடைய புறத்தோற்றம் அவருடைய மனதின் உணர்வுகளையும் இருதயத்தில் உள்ளவைகளையும், அவருடைய மதிப்பீடுகளையும் அவருடைய நோக்கங்களையும் அவருடைய மனப்பான்மையையும் வெளிப்படுத்திவிடும். ஒரு மனிதனுக்கு முரட்டாட்டமுள்ள மனமிருக்குமானால் அவனுடைய உடைகள் பிரதிபலித்துவிடும். ஒரு மனிதனுடைய தராதரம் தாழ்வாகவும் கவனக்குறைவாகவும் இருக்குமானால் அது அவனது தோற்றத்திலும் பிரதிபலிக்கும். தோற்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட தோற்றம் ஒரு மனுஷனுடைய மனம் நல்லதா, கெட்டதா என்று பெருமளவு காட்டிக் கொடுத்து விடும். ஆனால் அது எல்லாவற்றையும் சொல்வதில்லை. தோற்றம் ஏமாற்றத்தை கொடுக்கக்கூடியதாகக் கூட இருக்கலாம். ஆகவே தான் வேதம் கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார். அதன் பிறகே நியாயத் தீர்ப்பு நாளிலே நியாயம் தீர்ப்பார் என்று கூறப்படுகிறது. அந்த நாளிலே அவரிடமிருந்து எதையும் மறைக்க முடியாது.

பிரசங்கியாருடைய புறத் தோற்றத்தைக் குறித்து இன்னும் ஒன்று சொல்லுகிறேன். அவர் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பவராகவும் அந்த வகையிலே கர்த்தருடைய பிரதிநிதியாகவும் இருக்கிறார். ஆகவே அவர் தன்னை சுத்தமாகவும், தினமும் முகச்சவரம் செய்து மீசை, தாடி போன்றவற்றை ஒழுங்காகவும் வைத்துக்கொள்ள வேண்டும். தன்னுடைய தோற்றத்தில் குறைந்தபட்சம் வாலிப பெண்களை போல் இல்லாதபடிக்கு தங்கள் முடியை வெட்டி சீராக வைத்துக்கொள்ள வேண்டும். புருஷர்கள் நீண்ட முடி வைத்திருப்பது வெட்கமாக இருக்கிறது என்று பவுல்

(1 கொரிந்தியர் – 11:14)ல் சொல்கிறார். சிலர் கேட்கலாம் நீளமென்றால் எவ்வளவு நீளமென்று. ஒருவர் நீளமான முடி வைத்திருக்கும் போது அது அவருக்கே எவ்வளவு நீளமான முடி என்று தெரியும். அது போலவே உங்களுக்கும் எனக்கும் தெரியும். அந்த மட்டில் இந்த பிரச்சினையை முடித்துக் கொள்ளலாம். தன்னுடைய தலைமுடியைக் குறித்த ஆட்சேபனையை விரும்பாத எல்லாரிலும் பிரசங்கியாரே அதைக் குறித்து அதிக கரிசனையுள்ளவராக இருப்பார். பிரசங்கியார் சுத்தமாக உடை உடுத்தவேண்டும். ஆனால் அது மற்றவர்களுடைய கவனத்தை விசேஷமாக ஈர்ப்பதாய் இல்லாத வகையில் இருக்கவேண்டும். தொழுகையின் போதும், பிரசங்கம்பண்ணும் போதும், உடை நேர்த்தியாக அணிந்துக்கொள்ள வேண்டும். ஒரு திருமணத்திற்கோ, சவ அடக்கத்துக்கோ அல்லது ஜனாதிபதியாலோ பிரதமராலோ அழைக்கப்பட்டால் எந்த உடை உடுத்த வேண்டும்? ஒருவருக்கு சூட், ஷூஸ், போன்ற நேர்த்தியான உடைகள் இல்லாத பட்சத்தில் தன்னிடத்தில் உள்ளவைகளிலிருந்து ஒழுங்காகவும், தூய்மையாகவும் அணிந்து செல்ல வேண்டும்.

நாம் வாழ்கின்ற காலம் ஜனங்கள் தங்கள் உடைகளையும் தோற்றத்தையும் குறித்து கவலையற்ற கேலிக்குரிய காலமாக இருக்கிறது. உதாரணமாக ஒரு பிரசங்கியார் தன்னைக் குறித்தும் தன் உடைகளைக்குறித்தும் சீராக இருப்பதைக் குறித்தும் கவலைப்படாமல் நாடோடியைப் போல தனக்கும், தன்மீதும் மற்றவர் மீதும். அறிவில்லாமலும் தேவனைப் பற்றி அறிவிக்காமலும் இருந்தால் அவர் உங்களுக்கு எப்படி தோன்றுவார் அல்லது அவரை பற்றி என்ன நினைப்பீர்கள்? அவரிடத்திலே ஆவிக்குரிய இடத்தை நாடி யார் வருவார்? உங்களை நீங்களே குழந்தைத் தனமாக ஆக்கிக்கொள்ளாதிருங்கள், இந்த விதமான காரியங்கள் ஒரு மாற்றத்தைக் கொடுக்கின்றன. இதைக் குறித்து மிக அதிகமாகப் பேச முடியும். ஆனால் இதைக் குறித்து எதிர்மறையாகவே பேசுகிறார்கள். ஒரு மனிதன் தன்னை மதிக்கிறவனாக இருந்தால் அதை அவன் உடுத்தும் உடையிலே வெளிப்படுத்துவான்.

ஒரு பிரசங்கியார் தன்னுடைய தோற்றத்தில் சரியாக காணப்படுவரானால் அது பார்க்கிறவர்களுடைய கண்களிலே அவர் தங்களுடைய நிலையிலிருந்து பின்னோக்கிபோகிறவராக இருக்க வேண்டும். இதைக்குறித்து நீங்கள் யோசிக்கிறீர்களா? மக்கள் தாங்கள் விரும்புகிற ஒருவர் ஆவிக்குரிய மற்றும் சரீர வாழ்க்கையில் நன்றாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அவர்கள் காண்பதெல்லாம் ஒரு தாழ்வான நிலையிலிருந்தால் எதிர் நிலைக்கு சென்று விடக்கூடும். நீங்கள் வியாபாரம் செய்கிற மக்களையோ அல்லது எந்தவொரு துறையிலும் வெற்றிகரமாக உள்ளவர்களையோ அவர்கள் எப்படி உடுத்துகிறார்கள் என்று பார்க்க வேண்டும். மறுபடியும் சொல்லுகிறேன் நல்ல தோற்றமுடையவராகவும், மக்களால் மதிக்கப்படுவராகவும் இருப்பதற்கு பணக்காரர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவர் தன்னைப் பற்றியும், தன்னைச் சுற்றியுள்ள மக்களுக்கு சொல்லுகிற செய்தியைப் பற்றியும், கவனமாக இருக்க வேண்டும்.

பிரசங்கியார்களே இந்தக் காரியங்களை குறித்து சிந்தித்து உங்களையும் உங்கள் வாழ்க்கையையும் மற்றவர்களுக்கு நீங்கள் எப்படித் தோற்றமளிக்கிறீர்கள் என்பதையும் குறித்துக் கொள்ளுங்கள். இது நிச்சயமாக ஒரு மாற்றத்தை உருவாக்கும்.

பெண்கள் பகுதி

# பாக்கியம் - Blessing

*-Glory Arjunan*



பெண்ணாகப் பிறப்பதே ஒரு பாக்கியம்! ஆச்சரிய மாயிருக்கிறதா? பெண் குழந்தை ஒன்று பிறந்துவிட்டாலே இடி விழுந்தாற் போல் எண்ணி துக்கப்படுகிறவர்கள் அநேகர். இப்படியிருக்க இது எவ்வாறு சாத்தியமாகும் என்கிறீர்களா? சகோதரிகளே, இது உண்மையிலும் உண்மை, நமது வேதாகமத்தில் ஏழு மரியாள்களைக் காணமுடிகிறது. அந்த ஏழு மரியாள்களின் வரிசையில் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து அற்புதமாய் விடுவிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களாலும், மற்றவர்களாலும் பெறமுடியாத பாக்கியத்தைப் பெற்ற அந்த பாக்கியவதி மகதலேனா மரியாள். ஆம் உயிர்த்தெழுந்த கர்த்தரை தரிசிக்கும் பாக்கிய பெற்றவள். தாம் பெற்ற பாக்கியம் பெருக இவ்வையகம் என இயேசு உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதலாக சீடர்களுக்கு அறிவித்தவளும் அவளே. இத்தனை பாக்கியத்தைப் பெற்றவள் ஒரு ஸ்திரீ என்றால் நாமும் இதற்கு விதிவிலக்கல்ல.

பாருங்கள், மகதலேனா மரியாள் இயேசுவின் பின்னாலே சென்று ஊழியம் செய்த இயேசுவின் சீஷியானவள். இயேசு தம்மிடத்திலிருந்து ஏழு பிசாசுளையும் துரத்திவிட்டதினிமித்தம் இயேசுவின் மேல் அளவில்லா அன்பு கொண்டிருந்தாள். அன்பு அவளை நெருக்கி ஏவ தன்னுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தாள் (லூக் 82-3). அன்பான சகோதரிகளே, நமதாண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை சகல பாவங்களின் பிடியிலிருந்து விடுதலை செய்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்னிருந்த நம்முடைய ஜீவியத்தைத் திரும்பி நோக்குவோமானால் பிசாசின் காரியங்கள் ஏராளமாயிருப்பதைக் காணமுடியும். அருவருப்பான பாவச்சேற்றிலிருந்த நம்மை இன்று விடுதலையாக்கி கறைதிரையில்லாமல் பரிசுத்தமாக்கியிருக்கிற நமமுடைய கர்த்தரிடத்தில் மகதலேனா மரியாளைப் போல் அளவில்லா அன்பு கொள்ளுவோமானால் நிச்சியமாய் நாமும் பாக்கியவதிகளாயிருப்போம். மட்டுமல்ல, நம் அன்பிற்கு அடையாளமாக நம்முடைய உடைமைகளால் அவருக்கு ஊழியஞ் செய்வோம். அநேக வீடுகளில் ஸ்திரீகளே வீட்டின் பொக்கிஷதாரிகளாக இருப்பார்கள். தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தையே ஓயாது நினைத்து பாலிசிக்கு மேல் பாலிசியை (Policy) அடுக்கிக் கொண்டிருப்பார்கள். அன்பின் சகோதரிகளே, பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என வேதம் கூறுவதை நினைவு கூறுங்கள். ஆஸ்திகளை விற்று இயேசுவுக்கு ஊழியஞ்செய்த இவளையும் மாதிரியாகக் கொள்ளுங்கள்.

இந்த மகதலேனா மரியாள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுகிறவளாக இருந்திருக்கிறாள். எனவேதான் இயேசு சென்றவிடமெல்லாம் சென்று ஊழியஞ்செய்ததோடல்லாமல் முடிவு பரியந்தம் இயேசுவை

விட்டுவிலகாதிருந்தாள். இயேசுவை சிலுவையிலறைந்த பிறகும் இயேசுவின் சிலுவையினருகே மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள். (யோவா 19:25) சரி இயேசுதான் சிலுவையிலறையப்பட்டுவிட்டார், இனி நம்வழியே செல்வோம் என்று சென்று விட்டாளா? இல்லை. இயேசுவின் சரீரத்தை எடுத்து கல்லறையில் வைத்த போதும் அங்கேயும் மகதலேனா மரியாள் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தாள் (மத் 27:61). ஜனங்கள் இயேசுவை பிடித்தவுடனே "சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப் போனார்கள்" (மத் 26:56) காரணம் தங்களுக்கும் இந்த கதி வந்துவிடுமோ என்ற பயம். ஆனால் மகதலேனா மரியாளோ "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்ற வசனத்திற்கேற்ப எந்த பயமுமில்லாதவளாய் இயேசுவின் சரீரம் கல்லறையில் வைக்கப்படும் மட்டும் அங்கேயே இருந்தாள். அதுமட்டுமல்ல, பிற்பாடு ஓய்வு நாள் முடிந்து " வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்" (யோவா 20:1) இதையறிந்த சீஷர்கள் வந்து காலியாகயிருந்த கல்லறையைக் கண்டு மீண்டும் தங்களிடத்திற்கே திரும்பிப் போய்விட்டார்கள்.

ஆனால் மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்; இயேசுவினிடத்தில் அவள் கொண்டிருந்த அன்பு தான் எத்தனை! அன்பு சகோதரிகளே, இக்காட்சியை உங்கள் மனக்கண் முன் கொண்டு வந்து பாருங்களேன்! நம்முடைய கலாச்சாரத்தின் படி கல்லறை பக்கம் செல்லவே பயப்படுகிற ஸ்திரீகளுக்கு இது ஒரு சவால் அல்லவா! மேலும் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இரண்டு தூதர்களை தரிசிக்கிறாள். அத்தோடும் நின்று விடவில்லை பின்பு உயிர்தெழுந்த கர்த்தரையே தரிசிக்கிறாள். எத்தனை பாக்கியம் இது! சற்று சிந்தியுங்கள்! அப்போஸ்தலாகளும் அநேக சீஷர்களும் அநேக ஸ்திரீகளும் இயேசுவின் பின்னே திரிந்து ஊழியஞ் செய்தார்கள். அனைவருமே இயேசுவின் மரணத்திற்குப் பின் தங்களுடைய வழியே சென்று விட்டார்கள். ஆனால் இவளோ, இயேசுவை விட்டு விலகவில்லை. இயேசுவை முதன் முதல் தரிசித்தவளும், இயேசுவின் உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதல் அப்போஸ்தலருக்கு சொன்னவளும் ஸ்திரீயாகிய மகதலேனா மரியாள்தான். எத்தனை பாக்கியவதி இவள்! அப்படியென்றால் ஸ்திரீகளாகிய நாமும் இந்த பாக்கியத்திற்கு பங்குள்ளவர்கள் என்று தானே பொருள்.

அன்பு சகோதரிகளே! மகதேலானா மரியாள் நமக்கெல்லாம் ஒரு சிறந்த மாதிரியாக விளங்குகிறாள். கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக , விடுதலைக்காக, ஆசீர்வாதத்திற்காக, இன்னும் எத்தனையோ சிலாக்கியங்களுக்காக அவருக்கு நாம் என்னத்தை செலுத்துவோம்! "உனக்காக நான் மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய்" என்ற தொனி நம் காதில் எப்போதும் விழுந்து கொண்டேயிருக்கட்டும். மகதலேனா மரியாளைப் போல் இயேசுவை விட்டு விலகாதிருப்போமானால் பெண்ணாக பிறந்திருக்கிற நாமும் பாக்கியவதிகளாக, அநேகருக்கு பாக்கியங்களைக் கொண்டு செல்லுகிறவர்களாக இருப்போம். கர்த்தர் தாமே நம்மை நற்கந்தமாக மாற்றுவாராக!



# ஜெயம் கொடுக்கும் தேவன்

சகோ.கிறிஸ்டிகுமார்

இன்றைய நாட்களில் பாவங்கள், சாபங்கள், பிசாசின் கட்டுகள், தோல்விகள், மனக்கலக்கங்கள், சோர்வுகள் போன்ற பல விதமான போராட்டங்களில் உழன்று கொண்டிருக்கும் மக்களை காண்கிறோம். இப்படிப்பட்டதான மக்களுக்கு, விடுதலை வாழ்வினை கொடுக்கவிரும்பும் தேவன், பரிசுத்தஆவியானவர் மூலமாக பவுலானவர் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1கொரி.15:57) என்று கூறுகிறார்.

நமது தேவன் தோல்வியில்லாதவர். இயேசுவானவர் இப்பூவுலகில் அவதரித்த நாளிலிருந்து, பலவிதமான போராட்டங்களை சந்தித்து வெற்றி கண்டவர். அவர் மரணம், பாதாளம், உலகம், பிசாசு, பாவம், சோதனை அனைத்தையும் ஜெயித்தவர். வேதாகமம் அவரை இஸ்ரவேலின் ஜெயபலமானவர், பொய் சொல்லுகிறதும் இல்லை என்று கூறுகிறது (1சாமு.15:29). வெற்றியை பெறாத ஒருவருக்கு வெற்றியைப் பற்றிய வழிகள் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. மாறாக தோல்விக்குரிய வழிகளை நன்கு தெரிந்து வைத்திருப்பர். இப்படிப்பட்டவர்களுடைய வழிகளை பின்பற்றுபவர்களும் தோல்விக்குரிய வழிகளை தெரிந்து கொண்டு வாழ்க்கையில் விடுதலையில்லாமல் அலைந்து திரிவர். இவர்கள் எடுக்கும் முயற்சிகள் எல்லாமே தோல்வியாக முடியும். ஆனால் ஜெயம் கொடுக்கும் தேவனாகிய நமதாண்டவரைப் பற்றிக் கொண்டவர்கள் அத்தனைபேரும் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ முடியும். ஏன் என்றால் அவர் ஒருவரே மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தெழுந்தவர். மனிதனாக இப்பூமியில் அவதரித்து மனிதர் படும் பாடுகளை அவர் பட்டதினாலே, அவ்விதமான பாடுகளுக்குள்ளாகும் மனிதர்களை விடுவிக்க அவரால் கூடும். இதை வேதாகமத்தில் எபி.2:18–ல்இவ்வாறாக வாசிக்கின்றோம். அவர்தாமே சோதிக்கப்பட்டு பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்.

இன்று நமக்கு, தாங்க முடியாத சோதனைகள் வரும்போது, எங்கு நமக்கு விடுதலை கிடைக்கும், யார் இதிலிருந்து நிரந்தர விடுதலை தருவார் என அங்குமிங்கும் அலைகிறவர்களாக இருக்கின்றோம். கண்ட கண்டதையெல்லாம் வணங்கமுற்படுகிறோம். ஆனாலும் வாழ்வில் விடுதலை என்பது இல்லவே இல்லை. இப்படிப்பட்டவர்களை பார்த்து வேதம் கூறுகிறது சங்.75:6–ல் கிழக்கிலும் மேற்கிலும் வனாந்தரதிசையிலுமிருந்து ஜெயம் வராது. ஜெயவீரர் கிறிஸ்துவினிடத்திலிருந்து, ஜெயம் வரும். குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும்; ஜெயமோ கர்த்தரால் வரும் என்று நீதிமொழிகள் புத்தகம் வெளிப்படுத்துகிறது (நீதி.21:31). பிரியமானவர்களே

நாமும், பாவத்தை எதிர்கின்ற சூழலில், தொழிலில், மேற்கொள்ளும் ஒவ்வொரு முயற்சியில், தேவனை அறிகின்றவிதத்தில், ஜெபத்தில், பலவிதமான போராட்டங்கள் வரலாம். அவ்வேளைகளில் நாம் சோர்ந்து விடாமல், சோதனைகளில் ஜெயமெடுத்த இயேசுகிறிஸ்துவை மனதில் கொண்டு, அவர் வார்த்தைகளுக்கு செவிகொடுத்து, அவர் சித்தம் அறிந்து செயல்படுவோமேயானால் ஜெயகிறிஸ்து நமக்கு நிச்சயம் வெற்றி தருவார். பரிசுத்த ஆவியானவர் பவுலின் மூலமாக கூறும் போது 2கொரி.3:17—ல் கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு எனக் கூறுகிறார்.

அன்பானவர்களே, மேலும் நாம் ரோம.8:37ஐ வாசித்தோமானால், நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றிலும் ஜெயம் கொள்ளுகிற வர்களாயிருக்கிறோமே. இயேசு கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே அவர் நம்மீது வைத்த அன்பு வெளிப்படுகிறது. இன்னுமாக வேதம்கூறுகிறது நல்லவனுக்காக ஒருவன் மரிக்க துணிவான், பாவிக்காக, நட்பை மறந்தவனுக்காக எவன் மரிக்க துணிவான்? இயேசுகிறிஸ்து பாவிக்காகத்தானே மரித்தார். இவ்விதம் அன்பு கூர்ந்த இரட்சகராலே, உபத்திரவம், துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், வியாகுலம் போன்றவற்றிலிருந்து நிச்சயம் ஜெயத்தை பெற்றுக்கொள்கிறவர்களாயிருக்கிறோம் அவருக்கு கீழ்படியும்போது, ஜெயம் கொடுக்கும் தேவன், தமது அடியவர்களுக்கும் ஜெயத்தை கட்டளையிட்டார் என்பதை பின் வரும் தேவதாசர்களைக் கொண்டு அறிகிறோம். மரணத்தருவாயில் ஜெயம் பெற்ற தானியேலைக் குறித்து வேதாகமம் தானி6:28—ல் தரியுவின் ராஜ்யபாரகாலத்திலும், கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது என வாசிக்கிறோம்.

தரியு ராஜாவின் காலத்தில், ஒரு குற்றமும், தவறும் செய்யாத தானியேலை எவ்விதத்திலாவது குற்றம் கண்டுபிடிக்கவேண்டுமென்று ராஜாவின் பிரதானிகளும், தேசாதிபதிகளும், எண்ணிக்கொண்டு, நாம் இந்த தானியேலை அவனுடைய தேவனைப் பற்றிய வேதவிஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்திரத்தை கண்டுபிடித்தாலொழிய அவனை வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தை கண்டு பிடிக்கக் கூடாது என்றார்கள் (தானி.6:5). இவ்விதம் குற்றப் படுத்தி சிங்கத்தின் கெபியிலே போடப்பட்டும், தானியேலை சிங்கத்தின் வாய்க்கு தேவன் விடுவித்தார். இவ்விதமாக தானியேல் தேவனின் பார்வையில் குற்றமற்றவனாகவும், ராஜாவின் பார்வையில் நீதிகேடு செய்யாதவனாகவும் இருந்தபடியினால் அவன் மரணத்தை ஜெயமாக மாற்றினார்.

அடுத்ததாக பாவத்திலே ஜெயம் பெற்ற யோசேப்பை குறித்து ஆதியாகமம்39:10—15 வரை வாசிக்கலாம். அவனை பாவம் செய்ய போத்திபாரின் மனைவி கட்டாயப்படுத்தினபோது, இத்தனைப் பெரிய பாவத்திற்கு உடன்பட்டு என்தேவனுக்கு விரோதமாக பொல்லாங்கு செய்வது எப்படி? என்று பாவத்தை விட்டு ஓடினான் செய்தார். இவற்றிற்கெல்லாம், யோசேப்பு தேவனுக்கு பயந்ததினாலும், குற்றமற்றவனாய் வாழ்ந்ததினாலும், தேவன் ஏற்றவேளையிலே உதவி செய்து அவனது வாழ்வை எகிப்திலே உயர்த்தினார்.

பிசாசின்மேல் ஜெயம் எடுத்த இயேசுகிறிஸ்துவை பற்றி லூக்.4:5,7 வாசிக்கின்றோம். பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து, நீர் என்னை பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று கூறுவதாக பார்க்கிறோம். எவ்விதத்திலாவது ஆசையைக் காட்டி தன்னை பணிந்து கொள்ள

செய்யலாம் என்று பிசாசு வகை தேடுகிறான். ஆனால் ஜெயக்கிறிஸ்துவோ இவ்வுலகமானது அழிவுக்குரியது என்று தெரிந்ததினாலும், பிதாவின் சித்தம் அறிந்து செயல்பட்டதினாலும், அவர் ஒருவருக்கே பணிந்து ஆராதனை செய்தால் அழிவில்லாத நித்திய ராஜ்யத்தை தருவார் என்று இவ்வுலக தலைவனை இயேசுவால் ஜெயிக்கமுடிந்தது. அந்த பிசாசை, ஆண்டவராகிய இயேசு சிலுவையின்மேல் ஆணியடித்து அவனுடைய துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு வெளியரங்கமானகோலமாக்கி, அவைகளின் மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ.2:15).

மேசேயினுடைய வாழ்க்கையை பாருங்கள் எபி.11:25ல் அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும், தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொண்டார் என்று வேதம் கூறுகிறது. இவர்கள் எல்லாம் நம்மைப்போல் இவ்வுலகில் வாழ்ந்தாலும் பாவத்திற்கு அடிமையாகிவிடாமல், பாவத்தை வெறுத்து பரிசுத்தத்தை நாடி, தேவன் பேரில் கொண்டிருந்த விசவாசத்தின் காரணமாக உலகத்தினை ஜெயித்து, தேவனால் உயர்த்தப்பட்டார்கள்.

இவ்விதமாக தேவனுடைய அடியார்களைப்போல் பாவத்திற்கும், பிசாசிற்கும், சோதனைகளுக்கும், உலகமாயைக்கும் எதிர்த்து நின்று ஜெயம் பெற வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதற்காக நமதாண்டவராகிய கிறிஸ்து மரித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். மரணத்தையும் பாதாளத்தையும் ஜெயித்தார். இதை 1கொரி.15:55ல் மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என வாசிக்கிறோம்.

ஜெயம் பெற்றவர்களுக்கு தேவன் அநேக நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் வைத்திருப்பதாக வெளிப்படுத்தின விசேஷம்2,3 அதிகாரங்களில் வாசிக்கிறோம் ஜெயங்கொள்ளுகிறவனுக்கு, ஜீவவிருட்சத்தின் கனியையும், ஜீவகிரிடத்தையும், மறைவான மன்னாவையும், ஜாதிகள்மேல் அதிகாரத்தையும் வெண்வஸ்திரத்தையும், தேவஆலயத்தின் தூனாகவும், தனது சிங்காசனத்திலே இடத்தையும், இது போன்ற அளவற்ற ஆசீர்வாதங்களையும் தருவேன் என வாக்குதத்தம் செய்திருக்கிறார்.

எனக்கு அன்பானவர்களே, தேவன் நம்மை இதற்காகவே அழைக்கிறார். நாமும் அவர் சத்தத்திற்கு செவி கொடுத்து, அவரில் விசுவாசம் உள்ளவர்களாகி, உண்மையுள்ளவர்களாய், பாவத்திற்கு விலகி குற்றமற்றவர்களாய் வாழும்போது இம்மையிலும் மறுமையிலும் நம்மை ஆசீர்வதிக்க, தேவன் ஆயத்தமுள்ளவராய் இருக்கிறார். நாமும் ஆயத்தமுள்ளவர்களாய் இருப்போமாக!

## ஜெபியுங்கள்

- தமிழக கிறிஸ்துவின் சபை ஊழியர்களின் முதலாவது கருத்தாய்வு கூட்டம் கொடைக்கானலில் சிறப்புடன் நடைபெற்றமைக்காக...
- புதிதாக இலங்கை சர்வதேச ஒலிபரப்பில் வெளிவரும் நிகழ்ச்சிக்காக ...
- சகோ.பிரபாகரனின் மனைவிக்கு கர்த்தர் ஒரு அழகான பெண்குழந்தையைக் கொடுத்தற்காக ...
- CD&DVD ஊழியங்களுக்காக, மற்றும் இரண்டாயிரத்து ஐந்நூறு வாசகர்களுக்காக ...



# ஞானஸ்நானத்தில் பல காரியங்கள் சம்பவிக்கின்றன

## Many Things Happen at Baptism

*- Jerome Savage*

மேலுள்ள தலைப்பு குறிப்பிடுகிறபடி, வேதாகம ஞானஸ்நானம் பல குறிப்பிடத் தகுந்த விளைவுகளைக் கொண்டு வருகிறது.

1. நாம் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றுகிறோம் (மத்.3:15).
2. நாம் கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம் (அப்.10:48).
3. நாம் பாவமன்னிப்பைப் பெறுகிறோம் (மாற்.16:16; அப்.2:38).
4. நாம் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் தங்கும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம் (அப்.5:32).
5. நாம் கிறிஸ்துவுக்குள் ஒரு குழந்தையாக மாறுகிறோம் (1பேது.2:2).
6. நாம் ஒரு புதிய சிருஷ்டியாக மாறுகிறோம் (2கொரி.5:17).
7. நாம் மனந்திரும்பி மறுபடியும் பிறக்கிறோம் (யோவா.3:5; மத்.18:3).
8. நாம் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்கிறோம் (கலா.3:27).
9. நாம் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானப்படுத்தப்படுகிறோம் (1கொரி.12:13; எபே.1:22,23).
10. நாம் சபையில் சேர்க்கப்படுகிறோம் (அப்.2:47).
11. நாம் கிறிஸ்துவின் ராஜ்யத்துக்குள்ளாக கொண்டு செல்லப்படுகிறோம் (கொலோ.1:13).
12. நாம் தேவனுக்கு முன்பாக இப்பொழுது தெளிவான மனசாட்சியைப் பெற்றிருக்கிறோம் (1பேது.3:21).
13. நாம் இப்பொழுது ஒரு கிறிஸ்தவனாக தேவனை மகிமைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (1பேது.4:16).
14. நாம் பல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களாயிருக்கிறோம் (எபே.1:3).
15. ஜெபங்களிலும் விண்ணப்பங்களிலும் பரிசுத்த ஆவியானவர் நமக்கு உதவி செய்கிறார் (ரோம.8:26,27).
16. நாம் வெளிச்சத்திலும், இயேசுவின் இரத்தம் நம்மை சுத்திகரிப்பதிலும் நடக்கிறோம் (1யோவா.1:7).
17. கிறிஸ்துவுக்குள் இப்போது ஆக்கினைத்தீர்ப்பு ஏதும் இல்லை (ரோம.8:1).
18. இவையெல்லாவற்றையும் செய்கின்ற தேவனுடைய செயல்பாடுகளில் நாம் விசுவாசம் கொண்டவர்களாயிருக்கிறோம் (கொலோ.2:12).

புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானத்திற்கு 128 ஆதாரங்கள் உள்ளன. இந்த அனைத்து அற்புத காரியங்கள் நடப்பதை அறிந்து ஏன் ஒருவன் ஞானஸ்நானத்தை மறுக்கவேண்டும்?

*- The Voice of Truth International*

**இயேசு உங்களில் தம்முடைய ஜீவனை முதலீடு செய்தார் நீங்கள் ஏதாவது வட்டியைக் காண்பித்துள்ளீர்களா? - VOTI**

## பொது அறிவு சோதனை

1. சிம்சன் மற்றும் ஹாரிசன் என்பவர்கள் எதனைக் கண்டுபிடித்தார்கள்?
   அ) குளோரோஃபார்ம் ஆ) பலூன் இ) போசான்
2. ஜான் லௌட் என்பவர் எதனைக் கண்டுபிடித்தார்?
   அ) காஸ் இயந்திரம் ஆ) உலோகவியல் இ) பால்பாயிண்ட் பேனா
3. சூரியமண்டல செயல்முறையைக் கண்டுபிடித்தவர் யார்?
   அ) கலிலியோ ஆ) கோபர்நிகஸ் இ) பின்சென்
4. ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு எது?
   அ) 1896ஆ) 1929 இ) 1903
5. காலரா தடுப்பு மருந்து யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?
   அ) ராபர்ட் காக் ஆ) ஹாஃப்மான் இ) லிஸ்டர்

விடைகள்: 1. அ 2. இ 3. ஆ 4. இ 5. அ

## நடப்புச் செய்திகள்

- பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் தீங்குகளைப்போக்க நடவடிக்கை. அமைச்சர் ஆர்காடு வீராசாமி உறுதி.
- சென்னையில் ரூ40 லட்சம் செலவில் கடல்சார்காட்சிகூடம். அமைச்சர் பொன்முடி தகவல்
- கூட்டுறவு சங்க தேர்தல் திட்டமிட்டபடி ஜூலை மாதம் 8-ந்தேதி முதல் 5 கட்டமாக நடைபெறும் என்று சட்டசபையில் அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.
- இங்கிலாந்து நாட்டு பிரதமர் டோனிபிளேர் ஜூன் 27-ந்தேதி பதிவி விலகப்போவதாக அறிவித்து இருக்கிறார்.
- ஏமன் நாட்டு ராணுவத்தில் தீவிரவாத எதிர்ப்பு படையில் கடந்த ஆண்டு முதல் பெண்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

**ஆண்டவருக்கு தன்னை அர்ப்பணித்து ஊழியம் செய்யக்கூடிய திருமணமாகாத ஊழியர்கள் தேவை இவ்விதழின் ஆசிரியரை மொபைல் எண்மூலம் தொடர்பு கொள்ளவும். 94435 58041**

நாம் விரும்பியும் பெறாத எல்லா காரியங்களைக் குறித்து புகார் எழுப்புவதற்குப் பதிலாக நமக்கேற்ற எல்லா காரியங்களையும் பெறவில்லையென நன்றியுள்ளவர்களாய் ஏன் இருக்கக்கூடாது? - *VOTI*

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-4
# இயேசுகிறிஸ்துவின் இரண்டாம்வருகை தாமதம் ஏன்?

சரித்திர ஆய்வு

John S.Nathan, Gospel Minister
Mobile: 9841017621

**ஏன் தாமதம்:**

கி.பி. முதலாம் நூற்றாண்டின் பவுலடியாரின் ஊழியத்தால் எபேசுவில் மாத்திரமல்ல, கொஞ்சங்குறைய ஆசியா கண்டம், எல்லா மதங்களும் தோன்றிய மதங்களின் தொட்டில் என்றும், விக்கிரக ஆராதனைக்கு பேர்பெற்ற கண்டமாகும் கி.மு.52–ல் தோமாவின் வருகையால் தென்னிந்தியா, மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் நற்செய்தி கூறப்பட்டு பல்லாயிரம் மக்கள் மனந்திரும்பினர். கி.பி 3–ம் நூற்றாண்டு முடிவுக்கு முன்பே ஐரோப்பா கண்ட முழுவதும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டது. தொடர்ந்து அவர்கள் விசுவாச வாழ்வு நடத்திச் செல்ல நல்லபோதகர்கள் இல்லாமலும் விசுவாசிகள் அனைவருமே வேதாகமத்தை வாசிக்கக்கூடாது என்று கத்தோலிக்க குருக்களின் (கி.பி606 முதல் 31.10.1517வரை) தவறான கட்டளையினாலும் 6–ம் நூற்றாண்டில் இஸ்லாமிய கூட்டத்தினர் ஐரோப்பா கண்டத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களை கொன்று குவித்து அவர்களின் மனைவிகளை கட்டாய மதம் மாற்றினர். தங்களின் விசுவாசத்தை காத்திட பல சோர்வுகளை சந்தித்ததினால் பல்லாயிரக்கணக்கானோர் இரத்தச்சாட்சிகளாக மரித்தனர். (எபி.11:33–39). இதனால் கிறிஸ்தவம் வளர்ச்சி குன்றியதோடல்லாமல், சீரழிந்தது.

15–ம் நூற்றாண்டில் அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு வேதாகமம் உலகின் பலமொழிகளில் அச்சிடப்பட்டதாலும் (இந்தியாவிலேயே முதன் முதலின் அச்சிடப்பட்ட புத்தகம் தமிழ் புதிய ஏற்பாடாகும்) இது தஞ்சை தரங்கம்பாடியில் 1713–ல் பர்த்தலோமியு சீகன்பால்கின் உதவியினால் கிடைக்கப்பட்ட பொக்கிஷமாகும். 4.7.1776 அமெரிக்கா விடுதலை பெற்று, அது அனேகமான உண்மையான ஊக்கமான திருப்பணியாளர்களை (Missonaries) உலக முழுவதும் அனுப்பியதால்தான் சுவிசேஷம் பரம்பினது. என்றாலும் இன்னும் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத 400கோடிக்கும் மேலான மக்களினம் இரட்சிக்கப்பட வேண்டி இயேசுகிறிஸ்துமிகவும் அக்கறையுள்ளவராயிருக்கிறாரே 2பேதுரு3:9–ன் படி கர்த்தர் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மில் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் என்பதை சிந்திக்கவும்.

*—தொடரும்*

**இதோ சீக்கிரமாய் வருகிறேன் - வெளி.22:7**

**சிறுவர் பகுதி**

# பரிகாசம்

***வேத பகுதி: 2இராஜாக்கள் 2:23–25***

***-K.Mohan**, B.Komarapalayam*



கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இன்று நாம் பரிகாசத்தைக் குறித்துப் பார்ப்போம்.

மற்றவர்களை பரிகாசம் செய்வது கர்த்தருக்கு கொஞ்சமும் பிடிக்காது. அப்படியிருக்கும்போது மற்றவர்களை பரிகாசம் செய்யலாமா? கூடாது இல்லையா. எலியாவின் நாட்களில் அவர் ஒருமுறை பெத்தேலுக்குப் போனாரு. வழியில் நடந்துபோகையில் பிள்ளைகள் பட்டணத்திலிருந்து வந்து, எலிசாவைப்பார்த்து என்னசொன்னாங்கனு தெரியுமா? மொட்டைத்தலையா ஏறிப்போ, மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொல்லி நிந்தித்தாங்க. எதற்கு மொட்டத்தலையா ஏறிப்போ மொட்டத்தலையா ஏறிப்போ என்று சொன்னாங்கனா எலிசாவுக்கு முன்பாக இருந்த தீர்க்கதரிசி எலியா அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஆகையால் இந்த பிள்ளைகள் எலிசாவையும் பார்த்து இப்படியாக சொல்லி கேலி செய்தாங்க. இப்படி செய்தா யாருக்குதான் கோபம் வராம இருக்கும்.

உடனே எலிசா என்ன செய்தாரு தெரியுமா? அவர் திரும்பி அந்தப்பிள்ளைகளைப் பார்த்து சபித்தார்; உடனே காட்டிலிருந்து இரண்டு கரடிகள் வந்து அங்கே கூடியிருந்த பிள்ளைகளை பிறீப்போட்டது. ஏன் அப்படி கேலி செய்யனும் கேலி செய்ததாலே தானே அந்தப் பிள்ளைகளை கரடி வந்து பிறீப்போட்டது. கேலி செய்யாம இருந்திருந்தால் எலிசா தாத்தா நல்ல கதைகளை சொல்லியிருப்பாரு, இல்லைனா ஒரு அற்புதம் செய்திருப்பாரு. பெத்தேலுக்கு வருவதற்கு முன்புதான் ஒரு அற்புதம் செய்தாரு அது என்ன வென்று தெரியுமா? சொல்ரே கவனமா கேளுங்க. பட்டணம் குடியிருப்பதற்கு நல்லதா இருந்தது ஆனா அங்கே இருந்த தண்ணீர் கெட்டது, நிலமும் பாழ்நிலமாயிருந்தது. அப்பொழுது எலிசா ஒரு புதுத்தோண்டியை எடுத்து அதிலே உப்புப் போட்டுக் கொண்டுவாருங்கள் என்று சொன்னார் அந்தப்படியாக கொண்டுவந்தார்கள். எலிசா அந்த நீருற்றண்டைக்குப்போய், உப்பை அதிலே போட்டு இந்தத் தண்ணீரை ஆரோக்கியமாக்கினேன்; இனி இதினால் சாவும் வராது, நிலப்பாழும் இராது என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல்லி அதை சரிசெய்தார். எப்படிப்பட்ட அற்புதம் பார்த்தீர்களா? தேவனுடைய அற்புதங்களை அறியாத இந்தப்பிள்ளைகள் எலிசாவைக் பரிகாசம் செய்ததால் 42 பிள்ளைகளை கரடி பிறீப்போட்டது. நாமும் தேவனுடைய மக்களை பரிகாசம் செய்யாது அவர்களுடைய ஆசீர்வாதமான வார்த்தைக்கு காத்திருப்போம்.

**மனப்பாட வசனம்:**

"பரியாசக்காரன் ஞானத்தைத் தேடியும் கண்டுபிடியான்; புத்தியுள்ளவனுக்கோ அறிவு லேசாய் வரும்" - நீதிமொழிகள் 14:6

## வேத அறிவுப் போட்டி எண்.82

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***

*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.*

1. மூடன், மூடத்தனத்தைப் பேசுகிறான்; அவன் இருதயம் எதை நடப்பிக்கும்?
2. நீர் என்னை உம்மோடே ஐக்கியமானவனென்று எண்ணினால், என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும் என்று யார் யாருக்கு எழுதுவது?
3. ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ, என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் எவரை மறந்துவிட்டார்கள்?
4. நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது எதை உனக்குத் தருவேன் என்று திருவுளம்பற்றுகிறார்?
5. அபத்தமானதைத் தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு கர்த்தரின் கை எப்படியிருக்கும்?
6. நான் எப்பிராயீமைக் கைபிடித்து நடக்கப் பழக்கினேன்; ஆனாலும் நான் தங்களைக் குணமாக்குகிறவரென்று என்ன செய்யாமற்போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்?
7. எவன் பவுலை விடுதலைபண்ணும்படி தனக்கு அவன் பணங்கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்?
8. நான் உங்களுக்கு சத்தியத்தை சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ என்றவன் யார்?
9. வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; எதுவே தகும்?
10. கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனி எதைக் காணாதிருப்பாய்?

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.
1தெசலோனிக்கேயர் 5:23

Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.


R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th June 2007.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**






**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை SW 49 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள்
மேலும்


**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள், செவ்வாய் மற்றும்
வியாழன், வெள்ளி காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ
செய்திகள் அடங்கிய **CD & DVD** -க்கள்
தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*
Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in

**Monthly Magazine**

**To**

*From*

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*
*S. India*